# பெரியாழ்வார் திருமொழி 2-10
## ஆற்றிலிருந்து

(ஆயர்மங்கையர் யசோதை பக்கல் கண்ணன் தீம்புகளைக்
கூறி முறையிடுதல்)

213 * ஆற்றில் இருந்து * விளையாடுவோங்களை *
சேற்றால் எறிந்து * வளை துகில் கைக்கொண்டு **
காற்றின் கடியனாய் * ஓடி அகம் புக்கு *
மாற்றமும் தாரானால் இன்று முற்றும் * வளைத்திறம்
பேசானால் இன்று முற்றும் (1)

214 குண்டலம் தாழக் * குழல் தாழ நாண் தாழ *
எண் திசையோரும் * இறைஞ்சித் தொழுதேத்த **
வண்டமர் பூங்குழலார் * துகில் கைக்கொண்டு *
விண்தோய் மரத்தானால் இன்று முற்றும் * வேண்டவும்
தாரானால் இன்று முற்றும் (2)

215 தடம்படு தாமரைப் * பொய்கை கலக்கி *
விடம்படு நாகத்தை * வால் பற்றி ஈர்த்து **
படம்படு பைந்தலை * மேலெழப் பாய்ந்திட்டு *
உடம்பை அசைத்தானால் இன்று முற்றும் * உச்சியில்
நின்றானால் இன்று முற்றும் (3)

216 தேனுகனாவி * செகுத்து பனங்கனி *
தான் எறிந்திட்ட * தடம்பெருந்தோளினால் **
வானவர் கோன் விட * வந்த மழை தடுத்து *
ஆனிரை காத்தானால் இன்று முற்றும் * அவை உய்யக்
கொண்டானால் இன்று முற்றும் (4)

217 ஆய்ச்சியர் சேரி * அளைதயிர் பால் உண்டு *
பேர்த்தவர் கண்டு பிடிக்கப் * பிடியுண்டு **
வேய்த்தடந்தோளினார் * வெண்ணெய் கொள் மாட்டாது * அங்கு
ஆப்புண்டு இருந்தானால் இன்று முற்றும் * அடியுண்டழுதானால்
இன்று முற்றும் (5)

218 தள்ளித் தளிர்நடை இட்டு * இளம் பிள்ளையாய் *
உள்ளத்தினுள்ளே * அவளையுற நோக்கி **
கள்ளத்தினால் வந்த * பேய்ச்சி முலை உயிர் *
துள்ளச் சுவைத்தானால் இன்று முற்றும் * துவக்கற

உண்டானால் இன்று முற்றும் (6)

219 மாவலி வேள்வியில் * மாணுருவாய்ச் சென்று *
மூவடி தாவென்று * இரந்த இம்மண்ணினை **
ஓரடி இட்டு * இரண்டாமடி தன்னிலே *
தாவடி இட்டானால் இன்று முற்றும் * தரணி
அளந்தானால் இன்று முற்றும் (7)

220 தாழை தண்ணாம்பல் * தடம்பெரும் பொய்கைவாய் *
வாழு முதலை * வலைப்பட்டு வாதிப்புண் **
வேழம் துயர் கெட * விண்ணோர் பெருமானாய் *
ஆழிபணி கொண்டானால் இன்று முற்றும் * அதற்கு அருள்
செய்தானால் இன்று முற்றும் (8)

221 வானத்தெழுந்த * மழை முகில் போல் * எங்கும்
கானத்து மேய்ந்து * களித்து விளையாடி **
ஏனத்துருவாய் * இடந்த இம்மண்ணினை *
தானத்தே வைத்தானால் இன்று முற்றும் * தரணி
இடந்தானால் இன்று முற்றும் (9)

222 * அங்கமலக் கண்ணன் தன்னை * யசோதைக்கு *
மங்கை நல்லார்கள் தாம் * வந்து முறைப்பட்ட **
அங்கவர் சொல்லைப் * புதுவைக்கோன் பட்டன் சொல் *
இங்கிவை வல்லவர்க்கு * ஏதம் ஒன்றில்லையே (10)